சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO.**247 / 2021**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **07.11.2024**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | கலைச்செல்வி | கிராமம் : | |
| க/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை கணினி நகல் - ம.சா.ஆ-1. மின்னஞ்சல் புகார் மனு கணினி நகல் - ம.சா.ஆ-2. சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய உத்தரவு சான்றிட்ட நகல் - ம.சா.ஆ-3. மனுதாரரின் சித்த மருத்துவ இளங்கலை பட்டம் ஜெராக்ஸ் நகல் - மா.சா.ஆ-4.(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). மனுதாரரின் சித்த மருத்துவ பதிவு சான்று ஜெராக்ஸ் நகல் - மா.சா.ஆ-5. மனுதாரரின் சித்த மருத்துவ முதுகலை பட்டம் ஜெராக்ஸ் நகல் - மா.சா.ஆ-6. (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). தொழில்வரி ரசீது ( 2 வரிசை) அசல் - ம.சா.ஆ-7. ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் - ம.சா.ஆ.8 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் பதிவு எண். TN 48 AZ 0565 ஆகும். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தை நான் தான் ஓட்டிச்சென்றேன். எனது வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தினை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு நான் தான் பொறுப்பாளி என போலீசார் என்மீது தான் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அதனை அனுசரித்து இறுதி அறிக்கை என்மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்மீதான குற்ற வழக்கினை உயர் நீதிமன்றம் நசித்துள்ளது (quashed). முதல் எதிர்மனுதாரர் மீது எவ்வித தவறும் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் பொறுப்பாளி என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு நான் பொறுப்பாளி என்பதால் இழப்பீடு பெறுவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்றாலும் அது முழுமையாக குணமடைந்துவிட்டது என்றாலும் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை மற்றும் வருமான இழப்பும்

ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் தொட்டியத்தில் மருத்துவமனை வைத்துள்ளேன். மேற்படி மருத்துவமனை வாரத்தில் ஆறு நாட்கள் இயங்கும். நேற்று மருத்துவமனை இயங்கியது. எனது வருமானத்தை நிருப்பிக்கும் வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்மீதான வழக்கினை உயர்நீதிமன்ற மதுரைகிளை நசித்த பின்னர் போலீசார் என்ன நடவடிக்கை மேற்கொண்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் மருத்துவமனையில் இருந்து விடுவித்தற்கான சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு நான் தான பொறுப்பாளி என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

(ஒம்/-ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.